மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: தலைவர் அவர்களே, நான் சொல்வதுபோல் நிலவள வங்கி வேளாண்மை ஊரக வளர்ச்சிக்கான வங்கியிடமிருந்து ஒப்புதல் இன்னும் கிடைக்கவில்லை. கிடைத்தால்—ஒவ்வொரு தாலுகாவிற்கும் ஒரு நிலவள வங்கி ஏற்படுதல் வேண்டும் என்பதுதான் அரசின் கொள்கை —அங்கே ஆரம்பிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. ப. முனுசாமி: தலைவர் அவர்களே, 2 மாதங்களுக்கு முன் அலுவலர்களைச் சந்திக்கும்போது கேட்டபோது அவர்கள் அரசுக்கு அனுப்பிவிட்டோம் என்று சொன்னார்கள், அதனால்தான் நான் கேள்வியை போட்டிருக்கிறேன். நிலுவையில் இருப்பதை மாற்றி உடனடியாக ஆரம்பிக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்ன பதில்தான்.

கைத்தறிகளின் அமைப்பை மாற்றி 'பெடலிங் சிஸ்டம்' உள்ள தறிகளை அறிமுகப் படுத்தும் திட்டம்.

278.—(*வினா எண் 21477)—திரு. செ. செம்மலை: மாண்புமிகு கைத்தறி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மனித சக்தியால் இயக்கப்படும் தற்போதைய கைத்தறிகளின் அமைப்பை மாற்றி நெசவாளர்களின் வேலைப்பளுவைக் குறைக்கும் வகையில் 'பெடலிங் சிஸ்டம்' (Pedalling system) உள்ள தறிகளை அறிமுகப்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: (அ) 1979—80 ஆம் ஆண்டு முதல் தறிகள் நவீனப்படுத்தும் திட்டத்தின் கீழ் நெசவாளர்களுக்கு நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மூலம் ''பெடல் தறிகள்'' வழங்க வகை செய்யப்பட்டுள்ளது.

(ஆ) இதுவரை 36 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் 341 பெடல் தறிகள் நிறுவப்பட்டுள்ளன.

திரு. செ. செம்மலை: தலைவர் அவர்களே, இந்த முறையை சில கூட்டுறவுச் சங்கங்களில் பரிட்சார்த்தமாக செயல்படுத்திப் பார்த்ததில் ஏதாவது பலன்கள் கிடைத்ததா? உற்பத்தி பெருக்கம் ஏற்பட்டதா? என்ற விவரத்தை அறிய விரும்புகிறேன்.

1984 மார்ச் 12]

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: தலைவர் அவர்களே, 36 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் 341 தறிகள் நிறுவப்பட்டுள்ளன. அதிலே 85 தறிகள்தான் இயங்கி வருகின்றன. ஏனென்றால் நெசவாளர்கள் மத்தியில் இந்தத் திட்டத்திற்குப் போதுமான வரவேற்பு இல்லை.

(முற்பகல் 9—50).

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறிக்கு என்று ஒதுக்கப்பட்ட சில ரகங்களை இந்த பவர் லூம் தறிகள் மூலம் நெசவு செய்து அப்படி உற்பத்தி செய்யப்பட்ட ரகங்களை கைத்தறி மூலம் உற்பத்தி செய்யபட்டதாக லேபில் ஒட்டி இப்போது விற்பனைக்கு கொண்டு வருகிற முயற்சியில் சிலர் ஈடுபட்டு இருக்கிறார்கள். இதனால் கைத்தறி துணிகள் தேக்கம் ஏற்பட்டு இருக்கிற ஒரு சூழ்நிலைக்கு தள்ளப்பட்டு இருக்கிறது. எனவே இப்படிப்பட்டவைகளை கட்டுப்படுத்துகிற வகையில், இப்படி பவர் லூம்கள் கைத்தறி துணி ரகங்களை நெய்வதை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக்கேள்விக்கும் இதற்கும் தொடர்பு இல்லை என்றாலும் கைத்தறிகளுக்கு ஒதுக்கப்பட்டு இருக்கிற ரகங்களை பவர் லூம்கள் அல்லது பெரிய ஆலைகள் அவர்கள் ஏற்றுக்கொண்டு செய்யக் கூடாது என்று ஏற்கெனவே மத்திய அரசு அறிவித்து அதை மாநில அரசும் பின்பற்றி வருகிறது. அப்படி அதை மீறுவார்களானால் அவர்கள் மீது எசன்ஷியல் கமாடிட்டீஸ் ஆக்ட்-ன் கீழ் தான் அவர்கள் மேல் நடவடிக்கை எடுக்க வாய்ப்பு இருக்கிறது. அந்த கவனத்தில் கொண்டு சமீபத்தில் நடைபெற்ற ரீஜினல் கைத்தறி அமைச்சர்கள் மாநாட்டிலும் இதுபோல டெல்லியில் நடைபெற்ற மாநாட்டிலும் தமிழகத்தின் சார்பில் அதற்காக தனியாக ஒரு லெஜிஸ்லேஷன் வரவேண்டும், சட்டம் கொண்டு வரவேண்டும் என்று இது சம்பந்தமாக பார்லிமெண்டில் இருப்பவர்களை மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்தி இருக்கிறது. மத்திய அரசில் இருக்கும் அமைச்சர் அவர்கள் தனியாக லெஜிஸ்லேஷன் வருகிற பார்லிமெண்டில் கொண்டுவரப்போகிறேன் என்ற உத்தரவாதம் கொடுத்து இருக்கிறார்கள். மத்திய அரசு இப்படி சட்டம் கொண்டு வந்து இந்த கைத்தறிகளுக்கு ஒதுக்கிய ரகங்களை அவர்களே செம்மையாக செய்து அதில் மற்றவர்கள் தலையிடாமல் இருக்க போதுமான நடவடிக்கையை எடுக்க வேண்டும். அப்படி நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று மத்திய அரசை கேட்டுக்கொள்கிறேன்.